**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**Calendar Case No.247/2021**
**Prosecution Witness**:PW4

| | | | |
|---|---|---|---|
| Name | சுப்ரமணியன்(PW4) | Caste | |
| Father's Name | பழனிவேல் | Calling | |
| Village | முதலிபாளையம் | Religion | |
| Taluk | அவிநாசி | Age | |
| District | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20th day of February 2025** by M.Thangamani, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present)*

**முதல் விசாரணை (அரசு தரப்பு)**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். சுமார் 12 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு சுமார் 09.30 மணியளவில் பூண்டி பாலம் அருகே அவிநாசி நோக்கி இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது அரசு பேருந்து ஒன்று திருப்பூர் – அவிநாசி நோக்கி வந்து கொண்டு இருந்தது. அதன் ரூட் நெ.32 ஆகும். அப்போது ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் ரோட்டை கடக்க முயன்றார். அப்போது அரசு பேருந்தின் இடது பின் சக்கரம் அந்த இருசக்கர வாகனத்தின் முன் சக்கரத்தில் உரசி இருசக்கர வாகனத்தில் வந்தவர் கீழே விழுந்துவிட்டார்.

பேருந்தின் ஓட்டுனர் பேருந்தை ஓரமாக நிறுத்திவிட்டு வந்து காயம்பட்ட நபரை பார்த்தார். பின்பு பேருந்தினை எடுத்துக்கொண்டு சென்று விட்டார். அடிப்பட்ட நபர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். அந்த நேரத்தில் அந்த இடம் இருட்டாக இருந்ததால் ஓட்டுனரின் முகத்தினை சரியாக கவனிக்கவில்லை. அனுப்பர்பாளையம் போலீசார் காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு):**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்பதால் சாட்சி குறுக்குவிசாரணை இத்துடன் முடித்து வைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை:– இல்லை**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br>VELLINGIRI LOGANATHAN<br>Digitally signed by VELLINGIRI LOGANATHAN<br>Date: 2025.02.20 16:24:16 +0530<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |

| Free True copy of Deposition received | | |
|---|---|---|
| | | |
| Assistant Public Prosecutor | Witness | Accused/ Defence counsel |